பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.40** **நாள்: 26.03.2018**

## மகாவீர் ஜெயந்தி நாளை முன்னிட்டு, அனைத்து இறைச்சிக் கூடங்களும் மூடப்பட வேண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் அறிவிப்பு

-----

மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு, 29.03.2018 (வியாழக்கிழமை) அன்று பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து இறைச்சிக் கூடங்களும் அரசு உத்தரவின்படி மூடப்படுகின்றன. அதேபோல், ஆடு, மாடு, இதர இறைச்சி விற்பவர்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்களில் பதப்படுத்திய இறைச்சி விற்பனை செய்யவும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசு உத்தரவினை செயல்படுத்த வியாபாரிகள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**